## வகுப்பறை வளங்கள் – விலங்குகள்

**வகுப்பு 1 -** பாடி ஆடி விளையாடலாம், ஆலமரத்துல விளையாட்டு, நாய்க்குட்டியைத் தேடி

**வகுப்பு 2 –** தோட்டத்தில் மேயுது வெள்ளை பசு

**விலங்குகள் பாடல்கள்** (ref: Story weaver.org)

| | |
|---|---|
| நாயி வால பாரு<br>நல்லா வளஞ்சி இருக்கு<br>வாயி லிருந்து நாக்கு<br>வழிஞ்சி வெளியே கிடக்கு!  | மாட்டு வாலு நாளும்<br>மணியை போல ஆடும்<br>ஊட்ட முள்ள பாலை<br>உனக்கு அள்ளிக் கொடுக்கும்  |
|  கொரங்கு வாலு நீளம்<br>குறும்பு ரொம்ப அதிகம்<br>மரத்தி ஏறி ஓடும்<br>மனுஷன் போல இருக்கும் |  சிங்க வாலு வானில்<br>சீறி நிற்கும் பாரு<br>தங்கள் ஆணை என்று<br>தாழ்ந்து வணங்கும் ஊரு |
| குதிர வால பாரு<br>குஞ்சலத்த போல<br>மதுர செல்லும் சால<br>மகிழ்ந்து ஓடும் மேல  | முதல வால நீட்டி<br>முழிச்சி முழிச்சிப் பார்த்தா<br>கதறி ஓடும் ஊரு<br>கலங்கும் நெஞ்சு ஆத்தா  |
|  பாம்புக் கெங்க வாலு<br>பாம்பு தானே வாலு<br>தாம்புக் கயிறப் போல<br>தரையத் தழுவி ஊரும் |  அணிலு வாலு பெரிசு<br>அழகு ரொம்பப் பவுசு<br>துணியப் போல மென்மை<br>தூய்மை யான மனசு |

**விலங்குகள் கதைகள்:** (ref: Story weaver.org)

| | |
|---|---|
| **அவையெல்லாம் யார் சாப்பிட்டது:** காட்டில் எதுவும் வீணாகப் போவதில்லை. எல்லாம் சுத்தம் செய்யப்பட்டு விடும். கழுகுகளும், கரையான்களும், எறும்புகளும், காட்டுப் பன்றிகளும்...  | **ஒருவேளை:** ஷ்யாமிற்கு ஒருவேளை நீளமான கழுத்து இருந்தால்... நீளமான கால்கள் இருந்தால்... பெரிய காதுகள் இருந்தால்... பானைபோன்ற வயிறு இருந்தால்...  |
| **கொஞ்சம் சிரிங்க:** மானுக்கும் முயலுக்கும் ஓட்டப் பந்தயம். மான் கீழே விழுகிறது. மற்ற விலங்குகள் உதவுகின்றன. அனைவரும் சேர்ந்து சிரிக்க வைக்கின்றன.  | **குளத்தில் இருந்த குறும்புக்கார மீன்கள்:** கிச்சுவும் விச்சுவும் குளத்திற்கு மீன் பிடிக்கச் செல்கிறார்கள். இருவரும் தூண்டில் போட்டு இழுத்தார்கள்... இழுத்தார்கள்... அய்யோ!!!  |
| **டிங் டாங்:** குழந்தை தூங்கப் போகிறது. அது என்ன சத்தம் டிங் டாங்... ட்ரிங், ட்ரிங்... டாங், டாங்... ர்ரிங், ர்ரிங்... எப்படி தூங்குறது!!!  | **பறவைகள் பேசும்:** ஆனால் நமக்குப் புரிவதில்லை. ட்வீஈஈஈஈ... ஹூஹிஹூஹிஹூ... பக் பக் பக்... க்வாஆஆஆ க்வாஆஆஆ...  |

விளையாட்டுகள்: (Ref: Montessori -At home guide- 101 activities)

| | |
|---|---|
|  **தண்ணீரை மாற்றுதல்:** ஒரு டம்ளரில் இருந்து மற்றொரு டம்ளருக்கு.<br>**பயன்கள்:** பொறுமை, கவனம், கை-கண் ஒருங்கிணைதல், சுதந்திரமாகச் செயல்படுதல், எழுதுவதற்குக் கைகளைத் தயார்படுத்துதல் | **தொட்டு உணர்தல்:**  வழுவழுப்பான மற்றும் சொரசொரப்பான பொருட்களைத் தடவிப் பார்த்துப் பிரித்தல்<br>**பயன்கள்:** புலன்களைப் பயன்படுத்தி, காரணம் அறிந்து பொருட்களை வகைப்படுத்தும் திறன் |
|  **இடுக்கியைக் கையாளுதல்:** தட்டில் இருக்கும் அரிசியை ஒரு சிறிய இடுக்கியால் எடுத்து வேறொரு கிண்ணதிற்கு மாற்றுதல்<br>**பயன்கள்:** கை தசைகள் வலிமை, கவனம், பொறுமை, மிகச் சிறிய பொருட்களை கையாளும் திறன் |  **வண்ண மணிகளைக் கோர்த்தல்:** வண்ண மணிகளை நூலில் கோர்த்தல்<br>**பயன்கள்:** பல வண்ணங்களை அழகுணர்ச்சியுடன் கையாளும் திறன், வண்ணங்களை அறிதல், எழுதுவதற்குக் கைகளைத் தயார்படுத்துதல் |
| **விதைத்தல்:** குழந்தைகள் ஒவ்வொருவரும் ஒரு விதையை ஊன்றி, வளர்ச்சியைக் கவனித்தல்.<br> **பயன்கள்:** உற்றுநோக்கும் திறன், உணர்திறன் | **கவர் போடுதல்:** பரிசுப்பொருள் உள்ள அட்டைபெட்டிக்குக் கவர் போடுதல் <br>**பயன்கள்:** நுண்தசை வளர்ச்சி, செயல்முறை வரிசை அறிதல் |
| **ஓட்டை போடுதல்:** ஒரு தாளில் விரும்பிய  வடிவத்தை வரைந்து, அந்த கோட்டின் மீது பன்ச்சிங் மெஷின் கொண்டு ஓட்டை போடுதல்<br>**பயன்கள்:** நுண்தசை வளர்ச்சி, கவனம், வடிவங்களை அறிதல் | **சமநிலை படுத்துதல்:** ஒரு பெரிய  வட்டம்போட்டு அதன் மேல், கையில் ஒரு மணியைப் பிடித்தபடி ஒவ்வொரு மாணவராக நடக்க வேண்டும். மணியிலிருந்து ஓசை வரக்கூடாது.<br>**பயன்கள்:** உடலை சமநிலை படுத்துதல் |

**வகுப்பறை செயல்பாடுகள்:**

**வண்ணம் தீட்டுவோம்**: ref- google images

மாணவர்கள் கோட்டுப் படங்களின் வண்ணம் தீட்டுவதில் அதிக ஆர்வம் உடையவர்கள் மேலும் இதன் மூலம் விலங்குகளின் வெளித்தோற்றத்தை உற்றுநோக்குவர்.




கோடுகளை இணை



வெட்டி எடு



மறைந்திருப்பதைக் கண்டுபிடி



வெட்டு… ஒட்டு… கண்டுபிடி…

